# மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்காதீர்கள்! இந்தித் திணிப்பை தமிழ்நாடு எப்போதும் எதிர்க்கும்!

## நாடாளுமன்ற மாநிலங்களவையில் – 'இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டு கால மகத்தான பயணம்' விவாதத்தில் – கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா உரை!

புதுடெல்லி, டிச. 21-

**நாடாளுமன்ற மாநிலங்களவையில், 'இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டு கால மகத்தான பயணம்' எனும் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா, "மாநிலங்களின் உரிமைகளை பறிக்காதீர்கள்! இந்தி மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள்!" என்று குறிப்பிட்டார்.**

மாநிலங்களவையில் திருச்சி சிவா ஆற்றிய உரை வருமாறு:-

அவையின் துணைத் தலைவர் அவர்களே! புகழ் மிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு கொண்டாட்ட விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கான் என்ற பெருமிதத்தோடு பங்கேற்கிறேன். சோதனையான காலகட்டங்கள் உள்ளன. பல்வேறு நெருக்கடிகளையும் தாங்கி நிலைத்து நிற்கும் ஒரு சிறந்த ஆவணம் நமது அரசியலமைப்புச் சட்டம். பல்வேறு நாடுகளைப் போல இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்பது புரட்சியிலிருந்து புறப்பட்டு வரவில்லை. அனுபவத்தின் அடிப்படையில் முன்னேற்றத்திற்கான வேராக அரசமைப்பு நெறிமுறைகளும் கொள்கைகளும் உருவாகின. அதைப் பற்றி நிறைய பேசலாம். வித்தலைப் பிரகடனத்தின் சிற்பி, அமெரிக்காவின் மூன்றாவது குடியரசு தலைவர் தாமஸ் ஜெபர்சன் எந்த நாட்டு அரசியல் சட்டமும் 19 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காது என்று எழுதினார். 'தேச அரசியல் சட்டங்களின் நிலைப்புத்தன்மை' என்ற ஆய்வின் நூலில் மூன்று ஆய்வாளர்களின் கருத்து மீண்டும் அதை உறுதிப்படுத்தியது. 17 ஆண்டுகளில் அரசியலமைப்புச் சட்டம் காலாவதி ஆகிவிடும் என்றது. அதில் அவர்கள் அரசியலமைப்பின் நெகிழ்வுத் தன்மை மற்றும் உள்ளடக்கத்தை முக்கியமான காரணமாகக் குறிப்பிட்டார்கள்.

தாமஸ் ஜெபர்சனின் கருத்தையும் தாண்டி, அதை மீண்டும் உறுதி செய்த மூன்று ஆய்வாளர்களின் கருத்தையும் தாண்டி, அவர்கள் குறிப்பிட்ட 17 ஆண்டுகளையும் தாண்டி நமது அரசியலமைப்புச் சட்டம் 75 ஆண்டுகளாக வலுவாகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருப்பதற்கு நாம் அதை உருவாக்கியவர்களை பாராட்ட வேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டத்தை போல் எந்த அரசியலமைப்புச் சட்டமும் நீண்ட காலம் விவாதிக்கப்படவில்லை.

அமெரிக்க அரசியலமைப்பு சட்டம் நான்கு மாதங்களும், தென் ஆப்பிரிக்க அரசமைப்புச் சட்டம் ஒன்பது மாதங்களுக்கும் அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கப்பட்டன. நாடு முழுவதும் ராஜதானி மாநிலங்களிலிருந்தும் இருந்தும் மன்னர் ஆண்ட பகுதிகளிலிருந்தும், ராஜதானி ஆணையர்களையும் சேர்த்து மறைமுகமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரசியல் நிர்ணய சபையில் முதலில் 389 உறுப்பினர்கள் இருந்தார்கள். பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு அது 299 உறுப்பினர்களாக குறைந்தது. இவையெல்லாம் முக்கியமான காரணிகள். நமது அரசமைப்புச் சட்டத்தின் வலுவான தன்மைக்கான காரணங்களாக நாம் இதைச் சொல்லுகிறோம்.

**தாய்க் கழகமான – நீதிக்கட்சி!**

165 நாட்களில் 11 கூட்டத் தொடர்களில் 114 நாட்கள் வரைவு திட்டத்திற்கு கவனம் செலுத்தப்பட்டது. 7635 திருத்தங்கள் பட்டியல் இடப்பட்டு 2473 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மற்ற நாட்டுச் சட்டங்களில் அப்படி திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நமது அரசமைப்புச் சட்டம் சட்டத்தின் ஆட்சியை நிறுவக் கூடிய பொறுப்பான அரசாங்கத்தை உருவாக்கியது. இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் கூட்டாட்சியை நிறுவுவதில், மாநிலங்களுக்கிடையே சமமான நல்லுறவு பேணுவதில், தனிமனித சுதந்திரத்தை பாதுகாப்பதில், இந்திய ஜனநாயக பண்புகளை வடிவமைப்பதில் நமது அரசியலமைப்புச் சட்டம் முக்கிய பங்கு வைத்தது.

இந்திய நிதி அமைச்சர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் பற்றி பேசி உள்ளார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 19 (4) பற்றி அவர் பேசியுள்ளார். நானும் அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் பற்றி இங்கே பேச விழைகிறேன். அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 15 (4), 15(5), 15 (6) பற்றி யது. மாட்சிமைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இங்கே குறிப்பிட்டார் செண்பகம் துரைராஜன் வழக்கிற்காக முதல் திருத்தம் மேற்கொண்டதாக! அனைவரும் அந்த வரலாற்றை அறிய வேண்டும். அது நடந்தது சென்னை மாகாணமாக இருந்த தற்போதைய தமிழ்நாட்டில். 1921 இல் எங்களது தாய்க்கழகமாகிய நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது இட ஒதுக்கீட்டின் பலன் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் கம்யூனல் ஜி.ஓ. வெளியிடப்பட்டது.

அதுவரை உயர் ஜாதியினர் மட்டுமே கல்வி, வேலை வாய்ப்பையும் அனுபவித்து வந்தார்கள். அதன் பிறகு 1927ல் மேலும் இட ஒதுக்கீடு விரிவாக்கம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகுதான் செண்பகம் துரைராஜன் வழக்கு பதிவு செய்யப்பட்டது. நியாயமாக தனக்கு கிடைக்கப்பட வேண்டிய மருத்துவக் கல்லூரி இடத்தை ஜாதி வாரியான இட ஒதுக்கீடு பறித்து விட்டது என்று கொடுத்த வழக்கினை ஏற்று நீதிமன்றம் ஜாதி வாரியான இட ஒதுக்கீட்டுக்கு ஆணையை ரத்து செய்தது. ஆனால் செண்பகம் துரைராஜன் மருத்துவக் கல்விக்கு விண்ணப்பமே செய்யவில்லை. விண்ணப்பிக்காத ஒருவர் எப்படி இடஒதுக்கீட்டால் பாதிப்புக்குள்ளாக முடியும் என்று உச்சநீதிமன்றம் இடஒதுக்கீட்டுக்கு எதிரான தீர்ப்பை தந்தது. அந்த காலகட்டத்தில் இட ஒதுக்கீட்டை அனுபவித்தவர்கள் பட்டியல் இனத்தவர்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும். அந்த காலகட்டத்தில் எங்களது வழிகாட்டி தந்தை பெரியாரும், எங்கள் கழக நிறுவனர் பேரறிஞர் அண்ணாவும், இட ஒதுக்கீட்டு வேண்டி மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். பின்னர் அது மக்கள் போராட்டமாக மாறியது. இதன் காரணமாகத் தான் 1951இல் அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்த முதல் திருத்தம் அரசமைப்புச் சட்ட பிரிவு 29( 2 ) மாநிலங்கள் சமூக அடிப்படையிலோ கல்வி அடிப்படையிலோ ஒடுக்கப்பட்ட பழங்குடி மற்றும் பட்டியலின மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கலாம் என்றது. பலர் இந்த உண்மையை உணர்வதில்லை. அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் திராவிடம் நிகழ்த்திய சாதனை. இதைத்தான் நாங்கள் திராவிட மாடல் என்கிறோம். இட ஒதுக்கீடு திரும்ப கிடைத்தது.

**மாநிலங்களின் ஒன்றியம்!**

பின்னர் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது, மண்டல் கமிஷன் எங்கள் தலைவர் கலைஞர் முயற்சியால் நடைமுறைக்கு வந்தபோது. அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கொண்டு வந்த போது அவரது



ஆட்சியை கவிழ்த்தவர்கள் யார்? இதே பி.ஜே.பி தானே! ஆனால் அந்த மண்டல் கமிசன் அடிப்படையில் இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. ஆளுங் கட்சி வரிசையில் உள்ள உறுப்பினர்களுக்கு சொல்லுகிறேன். இன்னும் அவைக்குறிப்பில் உள்ளது. நீங்கள் உண்மையிலேயே பிற்படுத்தப்பட்டவர்கள் மீது அக்கறை கொண்டிருந்தால் அரசாணையாக உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டைச் சட்டமாக்குங்கள். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை கொண்டு வரத்தெரிந்த உங்களுக்கு பிற்பட்டோர் இடஒதுக்கீட்டிற்கான அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரத் தெரியாதா? அதைச் செய்யாமல் தாங்கள் ஏதோ பிற்படுத்தப்பட்டவரின் நலனுக்கானவர்கள் என்பது போல பெருமை பேசுகிறீர்கள்.

பல்வேறு முக்கிய பிரச்சினைகளை முன்னிறுத்தி துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டபோது, அடிப்படை உரிமைகளுக்கான துணை குழுவின் உறுப்பினராக இருந்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் சரியான நேரத்தில் வரைவுக் குழுவின் தலைவராக பொறுப்பேற்றார். அரசியல் உரிமைகளுக்கான துணைக் குழு அறிக்கை 1947 பிப்ரவரி 27 இல் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து வடிவமாக சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டது. டாக்டர் அம்பேத்கர் அவர்களோடு, திரு. முன்சி, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் மற்றும் கர்னம் சிங் ஆகியோர் சமர்ப்பித்தார்கள். அம்பேத்கர் சமர்ப்பித்த வரைவு அறிக்கையில் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் (United States Of India) என்று குறிப்பிடுகிறார். அவருடைய இந்த வார்த்தை அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை நினைவுபடுத்துவதாக அமைந்தது. கூட்டாட்சித் தத்துவத்தை நிலை நிறுத்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அம்பேத்கர் தெளிவாகச் சொன்னார்.

வலிமையான மாநிலங்கள் என்பதே அம்பேத்கரின் உறுதியான எண்ணமாக இருந்தது. ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களின் ஒன்றியம் என்று குறிப்பிடுகிறது. இது கூட்டாட்சியின் சுருக்கமான எழுத்து வடிவம். சமத்துவத்தின் மதிப்பையும் நேர்மையின் மதிப்பையும் நிலை நிறுத்த, பிராந்திய வேறுபாடுகளையும் கலாச்சார வேறுபாடுகளையும் நாம் மதிக்க வேண்டும். இது ஆளுங்கட்சி இன்று முக்கியமாக செய்ய வேண்டிய ஒன்று. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத அடிப்படையிலான மற்றும் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர்களை பாதுகாக்கிறது. எந்த மதத்தையும் சாராத நாடு என்ற உத்தரவாதத்துடன் மதச் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை பாதுகாக்கிறது. எந்த மதத்தையும் சாராத நாடு என்று அரசியலமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் இருக்கிறது. மதச்சார்பற்ற நாடு என்பது தெளிவாக உள்ளது. ஆனால் இன்று நடப்பது என்ன? நான் விவாதத்தின் தரத்தைக் குறைக்க விரும்பவில்லை. ஏனென்றால் இன்று நடந்து கொண்டிருப்பது, வெற்றிகரமான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு விழா விவாதம். நாம் அரசமைப்புச் சட்டத்தை போற்றுகிறோம். அரசியல் நிர்ணய சபையில் இடம்பெற்று இருந்த பல்வேறு மேதைகளையும் அறிஞர்களையும் போற்ற வேண்டியது நம்முடைய கடமை. அவர்களே நம் அரசமைப்பின் சிற்பிகள். டாக்டர் அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், அபுல் கலாம் ஆசாத், ராஜேந்திர பிரசாத், முன்சி, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், பி.என். ராவ், சியாம் பிரசாத் முகர்ஜி, கிருபளானி, ரஃபி அகமது கித்துவாய், சந்தானம், கே.டி.சா,ஹெச் வி காமத், டி.டி.கிருஷ்ணமாச்சாரி இவர்களோடு காயிதே மில்லத் சாய்பு.

முகமது அலி ஜின்னா இஸ்லாமியர்களுக்கு என்று தனி நாடு கேட்டபோது, அப்படி நாட்டு பிரிவினை நடைபெற்ற போது, நான் முன்பு குறிப்பிட்டதை போல அரசியல் நிர்ணய சபையில் இருந்த 389 உறுப்பினர்களின் எண்ணிக்கை 299 ஆக குறைந்த பொழுது "இஸ்லாமியர்களே என்னுடன் இஸ்லாமிய நாட்டுக்கு வாருங்கள்" என்று முகமது அலி ஜின்னா அழைப்பு விடுத்தார். காயிதே மில்லத் உள்ளிட்ட இங்குள்ள இஸ்லாமியர்கள் பதிலளித்தார்கள், "நாங்கள் இஸ்லாமியர்கள் தான் ஆனால் இந்தியர்கள்" என்று . ஆனால் நாம் இப்பொழுது அவர்களை எப்படி நடத்துகிறோம் ? மதரீதியான, மொழி ரீதியான சிறுபான்மையினரின் மனதில் எள்ளளவும் அச்சமில்லை என்ற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

ஒருமுறை பட்டாபி சீத்தராமையா அம்பேத்கரைப் பற்றிக் குறிப்பிடுகிற பொழுது, "என்ன ஒரு புத்திசாலித்தனத்தோடு அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வந்துள்ளார், இவர் கொண்டு வந்த இந்த அரசியல் அமைப்பு சட்டத்தை யாரும் தவிர்க்க முடியாது, யாரும் வெல்ல முடியாது, யாராலும் அழிக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார். அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத், "அரசியல் நிர்ணயசபை ஏதாவது ஒரு சிறந்த கடமையை செய்திருக்கிறது என்று சொன்னால் அது டாக்டர். அம்பேத்கரை வரைவுக்குழு தலைவராக நியமித்ததே" என்று குறிப்பிடுகிறார். அம்பேத்கர் மிகவும் பொறுப்போடு செயல்பட்டார்/ அனைவராலும் போற்றி புகழப்பட்டார். "நான் வரைவுக் குழுவிற்குள் வருகிறபோது பட்டியலின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை தவிர வேறெந்த நோக்கமும் எனக்கு இல்லை" என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். "இந்த அரசியல் நிர்ணய சபையிலிருக்கும் பல பெரியோர்கள், என்னை விட அறிவிற்சிறந்த அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் போன்றோர் என்னை தலைவராக்கி இருக்கிறார்கள். என்னை வரைவுக் குழு தலைவராக தேர்வு செய்து இருக்கிறார்கள்" என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். "பெரிய பொறுப்புக்களை அளிப்பார்கள் என்று எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாதிருந்த என் மீது எதிர்பார்ப்போடு பொறுப்பை அளித்துள்ளார்கள்" என்றும் குறிப்பிடுகிறார்.

**'ஆமாம் சாமி' போடுபவர்களின் அவை!**

ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக இருந்தபோது சிமெண்ட் இல்லாமல் கருப்புக் கல்லாலும் அங்கே இருக்கிற வெள்ளைக் கல்லாலும் இடைவெளியோடு கட்டப்பட்ட ஓர் நடைபாதையாக இருந்ததை அரசமைப்புச் சட்டத்தை அனைத்து குழுக்களையும் ஒன்றிணைத்து முழுமை பெறச் செய்த பெருமை காங்கிரஸிற்கு உண்டு. அதற்காக என்னை காங்கிரஸ் கட்சியின் கேடயம் என்று எண்ண வேண்டாம். நியாயத்தை நியாயமென்று சொல்கிறேன். நடந்தவற்றை அப்படியே சொல்கிறேன். இதை இங்கே குறிப்பிடுகிறேன்.

அம்பேத்கர் அரசமைப்புச் சட்டத்தில் ஒவ்வொருவரின் பங்கையும் பரந்த மனதோடு குறிப்பிடுகிறார். அது முதலில் ஆமாம் சாமி போடுபவர்களின் அவையாகவே இருந்தது. அதிர்ஷ்டவசமாக அங்கேயும் சில புரட்சிகர சிந்தனையாளர்கள் இருந்தார்கள் என்று காமத், தேஸ்முக், சித்வா, போன்றோரின் பங்களிப்பை புகழ்கிறார். இதுதான் ஜனநாயகம். நமது அரசமைப்புச் சட்டம் மிகச்சிறந்த தன்மைகளைக் கொண்டுள்ளது. நான் தற்போது அதற்குள் செல்ல விரும்பவில்லை .

இந்த அவையில் நான் ஒரு மாபெரும் தலைவரை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர் தன்னிகரில்லாதவர். மாபெரும் சிந்தனையாளர். சிறந்த அறிஞர். அவர்தான் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பேரறிஞர் அண்ணா. அவர் தொண்டர்களுக்கு பகிரங்கமாக நாட்டு நடப்புகளை மடல்களாக எழுதுவார். நம் நாட்டில் நடப்பது என்ன? உலகத்தில் நடப்பது என்ன? நடந்தது என்ன என்றெல்லாம் வரலாற்றின் செழுமையை எழுதுவார், சரித்திரத்தை மாற்றிய புரட்சிகள் அதற்கான காரணங்கள் பற்றி எழுதுவார். மக்கள் எப்படி தங்களின் அடிமை விலங்கை அறுத்தெறிந்தார்கள் என்றெல்லாம் கட்சியின் கடைக்கோடி தொண்டனுக்கும் தனது எழுத்துக்களின் மூலமாக மடல்களின் வழியாக அறிவுத்தெளிவை, சிந்தனைக்கிளர்ச்சியை ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா. அது புகழ்பெற்ற சரித்திர ஏடு. அந்தக் கடிதங்களெல்லாம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் வரலாற்று ஆவணங்கள்.

அந்த மடல்களை அவர் "அன்புத்தம்பி" என்று தான் தொடங்கினார். இந்த குடும்ப பிணைப்பும், பாசமும் அவரால் தான் கொண்டு வரப்பட்டது.

**அறிஞர் அண்ணாவின் மரண சாசனம்!**

அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடைசி மடல் அண்ணாவின் மரண சாசனம் என்று அழைக்கப்படுகிறது. அது அண்ணா முதலமைச்சராக இருந்தபொழுது எழுதியது. அண்ணா எழுதுகிறார்,

"தம்பி! நான் பதவிக்காக அலைபவன் அல்ல என்பது உனக்கு நன்றாகத் தெரியும். மேலும் நான் முதலமைச்சர் பதவியேற்று மகிழ்ச்சியாக இல்லை. ஏட்டளவில் கூட்டாட்சித் தத்துவம் பேசிக்கொண்டு, நடைமுறையில் அதிகாரக் குவியலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசின் கீழ் நான் முதலமைச்சராக இருப்பதை எண்ணி வருந்தாத நாளில்லை. மக்களாட்சி சிறக்க மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும்" என்று எழுதினார்.

இந்த ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் மாநிலங்கள் தங்களது உரிமைகள் ஒவ்வொன்றாக இழந்து பலகீனமடையும் என்பதை அவர் அன்றே உணர்ந்திருந்தார். ஆனால் இப்பொழுது என்ன நடக்கிறது? அதைவிட நிலைமை மோசம்.

தற்போதைய பிஜேபி அரசால் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் எல்லாம் மாநில உரிமையை அபகரிப்பதாக, மாநிலங்களின் அதிகாரத்தை மீறுவதாக, மாநில அதிகாரத்தை குறைப்பதாகவே இருக்கின்றன. அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பிறகு எங்களின் மாபெரும் தலைவர் கலைஞர் மாநில முதலமைச்சராகவும் கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பிரதமரை சந்தித்து விட்டு டெல்லியில் வைத்து ஊடகங்களிடம் சொன்னார், "அதிகாரம் இல்லாத முதலமைச்சராக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை, எனவே நான் பொறுப்பேற்று முதல் கடமையாக மத்திய மாநில உறவு குறித்து ஆராய நான் ஒரு கமிட்டியை அமைக்க போகிறேன்" என்றார்.

தற்போது டில்லி யூனியன் பிரதேச நிலைமை அதைவிட மோசமாக உள்ளது. முதலமைச்சருக்கான அதிகாரம் எடுக்கப்பட்டு துணைநிலை ஆளுநருக்கு கொடுக்கப்பட்டது. தலைமைச் செயலாளர் முதலமைச்சரை விட அதிகாரமிக்கவர் ஆனார். துறைச் செயலாளர்கள் எல்லாம் மந்திரிகளை விட அதிகாரமிக்கவர்கள். இது தலைநகர் டெல்லியின் நிலை.

மாநிலங்கள் கூட மாநில மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் தான் இருக்கின்றன.

இதையெல்லாம் முன்கூட்டியே உணர்ந்ததால் தான் தலைவர் கலைஞர் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ராஜ மன்னார் தலைமையில் கலைஞர் ஒரு கமிட்டி அமைத்தார். அவரோடு அதில் சிறந்த இரண்டு ஆளுமைகளையும் நியமித்தார். ஒருவர் நீதிபதி சந்திரா ரெட்டி, மற்றொருவர் கல்வியாளர் ஏ.லட்சுமண சாமி முதலியார். அந்த கமிட்டிக்கான அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தயவு செய்து அந்த அந்த கமிட்டிக்கான அதிகாரம் வரம்பை பாருங்கள். பொதுப்பட்டியலில் இருந்தும் ஒன்றிய பட்டியலில் இருந்தும் மாநில பட்டியலுக்கு எந்த அதிகாரங்களை மாநிலங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும், ஒன்றிய அதிகாரத்திலிருந்தும் பொதுப் பட்டியலிலிருந்தும் எவற்றையெல்லாம் நீக்கம் செய்ய வேண்டும் என்றெல்லாம் அதிகாரம் வரையறுக்கப்பட்டது. அந்த கமிட்டியின் அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அன்றைக்கு சட்டமன்றத்தில் பேசிய கலைஞர் இது என் வாழ்நாளில் மறக்கமுடியாத வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்று குறிப்பிட்டார். இன்றைக்கும் ராஜமன்னார் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் பலரால் மேற்கோள் காட்டப்படுகிறது. ராஜமன்னார் கமிட்டியின் முக்கியமான அம்சங்களில் ஒன்று, மாநிலங்களுக்கிடையே ஒரு குழு அமைக்க வேண்டும் என்ற பரிந்துரை. அது 1989இல் விபிசிங் பிரதமராக இருந்தபோது கலைஞரின் முயற்சியால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ராஜமன்னார் கமிட்டியின் பரிந்துரைகள் இன்றும் குறிப்பிடத்தக்க ஆவணமாக இருக்கிறது. யாராவது பார்க்க விரும்பினால் அந்த அறிக்கையை பார்க்கலாம். பின்னர் இந்திரா அம்மையார் ஆட்சியின் போது இதே அடிப்படையில் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. அதுவும் மத்திய மாநில அரசுகளின் உறவுகளை ஆராய்வதற்காகவே அமைக்கப்பட்டது. மறுபடியும் பூஞ்சி கமிட்டியின் இதே காரணத்திற்காக அமைக்கப்பட்டது.

அனைத்து ஆணையங்களும் அனைத்து கமிட்டிகளும் ஒரே ஒரு மையக்கருத்தை தான் சொன்னது. அது என்னவென்றால் இந்தியாவின் தனித்தன்மையே அதன் வேற்றுமையில் தான் இருக்கிறது என்பது.

**பூஞ்சி கமிசன்!**

ராஜமன்னார் கமிட்டி மாநிலங்களுக்கு பொருளாதார சுதந்திரம் உள்ளிட்ட மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

சர்க்காரியா கமிசன் ஒன்றிய நிர்வாகத்தால் பாதிக்கப்படுகின்ற சட்டங்கள் வருகின்றபோது மாநில அரசோடு கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், மாநிலங்களுக்கு வரிவருவாய் பங்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. அதையும் நடைமுறைப்படுத்தவில்லை. நடைமுறைப்படுத்துவதில் கூட பாரபட்சம் காட்டப்படுகிறது. பூஞ்சி கமிட்டி பொதுப் பட்டியலிலும், நிறுவனமயமாக்கப்பட்ட துறைகளிலும் சீர்திருத்தம் தேவை என்றும், இது மத்திய, மாநில உறவுச் சிக்கலுக்கு தீர்வாக அமையுமென்றும் பரிந்துரைத்தது.

கற்றறிந்த அமைச்சர்களும் உறுப்பினர்களும் இங்கே இருக்கிறீர்கள். தமிழ்நாட்டுக்கு பொருத்தமான ஒரு கிராம நலத் திட்டம், ராஜஸ்தானுக்கோ மற்ற கிழக்கு மாநிலங்களுக்கோ பொருந்தாது. இது ஒன்றிய அரசின் திட்டங்களை மறுஆய்வு செய்யவேண்டும் என்பதற்கான காரணங்களில் ஒன்று.

நடைமுறையில் நிதிப்பகிர்வும் அதிகார பகிர்வும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஒன்றிய அரசு தலையிட்டு முடக்க முடியாத அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுத்து, தேசக்கட்டமைப்பில் மாநிலங்களின் பங்களிப்பு சரியான அளவில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிற்கு நிறைய கசப்பான அனுபவங்கள் இருக்கிறது. ஜாதி மத பாகுபாடு இந்தியாவில் எங்கும் வியாபித்திருப்பதாக டாக்டர் அம்பேத்கர் சொன்னார். ஆனால் இப்பொழுது பிராந்திய பாகுபாடு மிக அதிக அளவில் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம். உதாரணமாக நிதி ஆணையத்தில் தமிழ்நாட்டிற்கான வரி பகிர்வு குறைந்து கொண்டே வருகிறது. 12 ஆவது நிதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு 3.069% கொடுத்தது, ஆனால் 15 ஆவது நிதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு 2.6% மட்டுமே கொடுத்துள்ளது. நேரடி வரிவிதிப்பில் ஒரு ரூபாய் வரியாக செலுத்தினால் எங்களுக்கு 29 பைசா தான் திரும்ப கிடைக்கிறது. தென் மாநிலங்கள் அதிலும் குறிப்பாக தமிழ்நாடு நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) பெரும் பங்கு வகிக்கிறது. ஆனால் குறைந்த அளவு நிதி பங்கீடு எங்களுக்கான பரிசா? அல்லது எங்களுக்கான தண்டனையா? இதையே நாங்கள் பிராந்திய பாகுபாடு என்கிறோம். இங்கே பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த, பல்வேறு நண்பர்கள் இருக்கிறார்கள். எனவே நீங்கள் நிதிப்பங்கீட்டில் சாதகமாக நடக்கும் மாநிலங்களின் பெயர்களை நான் குறிப்பிட விரும்பவில்லை.

அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு சிறப்பாக செயல்படுகிறது. உதாரணமாக உயர்கல்வித்துறையை எடுத்துக் கொண்டால், தேசிய அளவில் உயர்கல்வி பயில்பவர் 28 சதவீதம். ஆனால் அது தமிழ்நாட்டில் 52 சதவீதமாக இருக்கிறது. இவ்வாறு அனைத்து தளங்களிலும் அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்படும் நாங்கள் ஒன்றிய அரசால் வஞ்சிக்கப்படுகிறோம். அரசமைப்புச் சட்டத்தின் 293 வது பிரிவை மாநில தன்னாட்சி மீது திணித்து, கட்டுப்பாடுகளை விதித்து, நிதிபங்கீட்டை குறைத்து மாநிலங்களின் வளர்ச்சியை முடக்குகிறீர்கள். மற்றொரு முக்கியமான பிரச்சனை மொழிக் கொள்கை. இந்தியை எதிர்ப்பதில் தமிழ்நாடு இன்னும் உறுதியாக இருக்கிறது, அது இந்தி என்ற மொழியை புறக்கணிப்பது ஆகாது. இந்தியாவின் பல்வேறு தரப்பட்ட மொழிகளை பாதுகாக்க, தேச ஒற்றுமையில் சமரசத்திற்கு இடமின்றி தமிழ்நாடு இரு மொழிக் கொள்கையை பின்பற்றி வளர்ந்து கொண்டிருக்கிறது.

இப்போது ஒரு தகவல்.

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருந்தது. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபை அலுவல் மொழி விவாதத்தில் ஒரு தரப்பு உறுப்பினர்கள் இந்திக்கும் ஒரு தரப்பு உறுப்பினர்கள் ஆங்கிலத்திற்கும் ஆதரவளித்தார்கள். ஓட்டெடுப்பில் இரு தரப்பிற்கும் சமமான வாக்குகளேகிடைத்தது. அரசியல் நிர்ணய சபை தலைவராக இருந்த டாக்டர் பாபு ராஜேந்திர பிரசாத் தலைவர் என்ற முறையில் தனக்கிருந்த ஒற்றை வாக்கினை இந்திக்குச் சாதகமாக அளித்ததால் இந்தி அலுவல் மொழியானது. அரசமைப்புச் சட்டத்தின் 368வது பிரிவு பாராட்டுக்குரியது.

அது அரசியல் சட்டத்தில் காலத்திற்கேற்ப திருத்தங்களுக்கு வழி செய்கிறது. இந்த திருத்தச் சட்ட பிரிவு இந்திய அரசியலமைப்பின் சிறப்பான ஒன்று, தனித்துவமான ஒன்று. இதன் மூலம் அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இன்றைய காலச் சூழலில் காலத்தின் தேவைக்கேற்ப திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

அரசமைப்பு சட்ட வரைவின் போது தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்தி என்ற தேவ நாகரி எழுத்து வடிவ மொழி அலுவல் மொழியாக தொடரும் என்று நாடாளுமன்றத்தில் 15 ஆண்டுகளுக்குள் வேறு ஏதும் சட்டங்கள் கொண்டு வராத பட்சத்தில் ஆங்கிலம் அந்த இடத்திலிருந்து நீங்கி, இந்தி மட்டுமே அலுவல் மொழியாக தொடரும் என்று.

எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா 1962 லிருந்து 1967 வரை இந்த அவையின் உறுப்பினராக இருந்தவர். அவர் அப்பொழுது மொழிக் கொள்கை பற்றி விளக்கமாக பேசியிருக்கிறார். அவரது உரையால் இந்த அவை பொலிவுபெற்றது. அலுவல்மொழி திருத்தச் சட்டம் 1963 கொண்டு வரப்பட்டது. இந்தி பேசாத மக்கள் இந்தியை ஏற்றுக் கொள்ளும் வரை ஆங்கிலமும் அலுவல் மொழியாக தொடரும் என்று அத்திருத்தச் சட்டம் தெளிவாக கூறுகிறது. அரசமைப்பு கொடுத்த உத்தரவாதங்களை எல்லாம் இந்த அரசு ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கிறது. இன்று வெறிச்சோடிக் கிடக்கின்ற மைய மண்டபத்தில் இந்த அரசமைப்பு தினத்தைக் கொண்டாடினால் போதுமா?

இந்த அவையில் விவாதித்தால் போதுமா? ஏட்டளவில் மட்டும் இருந்தால் போதாது செயல்பாட்டிற்கு வர வேண்டும்.

இந்தியா பல்வேறு மதங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு பண்பாடுகள், பல்வேறு மாநிலங்கள் கொண்ட நாடு. நீங்கள் ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே நாடு ஒரே ரேசன் கார்டு,ஒரே மதம், ஒரே கல்வி, ஒரே மொழி என்று அனைத்திலும் ஒரே என்ற ஒற்றை வார்த்தையை பயன்படுத்துகிறீர்கள். மையமண்டபம் தற்போது செயல்படாத காரணத்தால் மக்களவை உறுப்பினர்களும் மாநிலங்களவை உறுப்பினர்களும் சந்திப்பதற்கு வாய்ப்பு இல்லை. இணைப்பிற்காக இருந்த மைய மண்டபத்தை செயல்படாமல் செய்தது உறுப்பினர்களை பிரிப்பதற்கா? மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு உறுப்பினர் ஐந்தாண்டுகள் முடிந்து செல்கின்ற போது மாநிலங்களவை உறுப்பினர்களை யாரென்றே தெரியாமல் செல்வார். மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் அதே நிலைதான். பின்னாளில் எங்காவது சந்திக்கின்ற போது அது ஒரு புதுமையாகத்தான் இருக்கும் ஒவ்வொன்றையும் ஒன்றாக மாற்ற நினைக்கும் நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும், மக்களவை உறுப்பினர்கள், அதைவிட மிகப்பெரிய வேதனை, மாநிலங்களவை உறுப்பினர்கள் என்று இந்தப் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் பிரிக்கிறீர்களே ஏன்?

அரசின் அனைத்து திட்டத்தின் பெயர்களும் ஹிந்தியில் அல்லது சமஸ்கிருதத்திலோ தான் உள்ளன. கற்றறிந்த அமைச்சர்கள், பூரி அவர்கள் இங்கே இருக்கிறார், எனது அன்புச் சகோதரர் யாதவ் அவர்கள் இங்கே இருக்கிறார், தயவு செய்து சொல்லுங்கள். பூபேந்தர் அவர்களே உங்களுக்கு நன்றாகவே தெரியும். அனைத்துச் மசோதாக்களும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆனால் கொண்டுவரும் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்தில் பெயரிடுவதற்கு யார் பொறுப்பு ? கொண்டுவரக்கூடிய ஒவ்வொரு மசோதாவும் ஹிந்தியில் அல்லது சமஸ்கிருதத்தில். நாங்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழையும் போது இப்பொழுது பழகிவிட்டது, எழுத்துக்கூட்டி படிக்கிறோம் உச்சரித்துப் பார்க்கிறோம் ஆனாலும் எங்களுக்கு பொருள் விளங்கவில்லை. அது என்ன "மக்கர் துவர்". இங்கே எங்கு சென்றாலும் சமஸ்கிருத எழுத்துக்கள் அல்லது இந்தி எழுத்துக்கள். தயவுசெய்து மனதில் வையுங்கள் இந்தியா என்பது. மாநிலங்களின் ஒன்றியம் என்பதை மறந்து விடாதீர்கள். அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் உள்ளன. அனைத்து மொழிகளையும் சமமாக நடத்துங்கள். மரியாதையோடு நடத்துங்கள். எந்த மொழியும் இன்னொரு மொழியின் மீது ஆதிக்கம் செய்யக்கூடாது. உலகத்திலே மிகவும் தொன்மையான மொழி தமிழ் மொழி. தமிழ் ஒரு வளமான மொழி. நீங்கள் சொல்லுகின்ற போது தமிழையும் சமஸ்கிருதத்தையும் பழமையான மொழி, செம்மொழி என்று சொல்கிறீர்கள். தமிழை சமஸ்கிருதத்தோடு ஒப்பிட முடியாது.

**மொழித் திணிப்பு!**

சமஸ்கிருதம் மக்களின் பேச்சு மொழி அல்ல. உரையாடும் மொழியல்ல. அது புத்தகங்களிலும் வேதங்களிலும் மட்டுமே இருக்கிறது .ஆனால் தமிழ் இலக்கண வளமிக்க மொழி இலக்கிய செறிவு மிக்க மொழி என அனைத்திலும் சிறந்து விளங்குகிறது. எட்டு நாடுகளில் தமிழ் அலுவல் மொழியாக இருக்கிறது. அப்படிப்பட்ட சிறந்த மொழியை நீங்கள் வெறுத்து ஒதுக்குவதையோ பாரபட்சம் காட்டுவதையோ நாங்கள் எப்படி அனுமதிக்க முடியும்? உங்களின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையால் சிறுபான்மையினரின் அச்சம் உருவாகிற நிலைமை தொடர்கிறது. நீங்கள் இன்றைக்கு அதிகாரத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் இந்தியா முழுதும் அனைவரையும் ஒரே மாதிரி நடத்த வேண்டும். மாறாக, உங்களுக்கு விருப்பமான மொழியை எங்கள் மீது திணிக்காதீர்கள். திணித்தால் தீவிரமாக எதிர்போம். நீங்கள் சொல்வதை நிலைநாட்டுகிறீர்கள், உங்கள் கருத்தை திணிக்கிறீர்கள். நாங்கள் ஒரு மொழிக்கு எதிரி கிடையாது. குறிப்பாக இந்திக்கோ அல்லது வேறு எந்த மொழிக்கும் நாங்கள் எதிரி அல்ல.. ஆனால் எங்கள் மீது பிற மொழியை திணிக்காதீர்கள்.

தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை பின்பற்றப்படுகிறது. தமிழ் மற்றும் ஆங்கிலம். வேறு மொழி படிக்க யாரும் விரும்பினால் அவர்கள் விரும்புகின்ற மொழியை படிக்கலாம். தி.மு.க.வினர் ஏதோ இந்தி படிப்பதை தடுத்ததாகவும், இடையூறு செய்ததாகவும் நிதியமைச்சர் கூட குற்றம் சாட்டுகிறார். இல்லை நிச்சயமாக இல்லை. தக்ஷிண பாரத் இந்தி பிரசார சபையின் தலைமையகம் தமிழ்நாட்டில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு லட்சக்கணக்கானோர் இந்தி படிக்கிறார்கள் பட்டம் பெறுகிறார்கள். நிதியமைச்சர் சொல்வது அடிப்படையற்ற குற்றச்சாட்டு. நாங்கள் ஒரு குறிப்பிட்ட மொழிக்கு, இந்தி மொழிக்கு எதிராக இருந்தால் நாங்கள் அப்படி இந்தி படிப்பதை அனுமதித்திருக்க மாட்டோமே! நீங்கள் விரும்பினால் நீங்கள் படிக்கலாம் . இந்த அரசாங்கம் இன்று முற்றிலும் கூட்டாட்சிக்கு எதிராகவும் அரசமைப்புக்கு எதிராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன்.

**எங்கள் மொழி வளமையானது!**

அரசமைப்பு தினம் கொண்டாடுகின்ற நாம் மதச் சார்பின்மையின் கூட்டாட்சி தத்துவத்தையும் நிலை நிறுத்த இனியாவது ஒரு முடிவுக்கு வாருங்கள். அவை மிக முக்கியமான காரணிகள் . நமது நாட்டுக்கும் அரசமைப்புக்கும் முதுகெலும்பு போன்றவை. (மணி ஒலிக்கிறது ). பேச்சை முடிப்பதற்கு முன்னால் நான் ஒன்றை அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறேன். கூட்டாட்சி தத்துவம் ஒன்றிய அரசை பலகீனப்படுத்துவதற்கு அல்ல. வலிமையான மாநிலங்கள் மூலம் வலிமையான ஒன்றிய அரசை உருவாக்குகிறது. நீங்கள் உங்களது மனதில் வையுங்கள் நாங்கள் ஒரு மொழிக்கோ ஒரு பிராந்தியத்திற்கோ எதிரானவர்கள் அல்ல. நாங்கள் இந்தியாவில் ஒரு கடைக்கோடியில் இருக்கிறோம். அது கடைக்கோடி அல்ல. இந்தியாவே தெற்கில் இருந்து தான் தொடங்குகிறது என்று பொருள். எங்களது மொழி வளமையானது. பழமையானது. இந்த தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எங்களது பங்களிப்பு அதிகம். எப்பொழுதெல்லாம் இந்திய ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் அங்கே முதலில் திராவிட முன்னேற்ற கழகம் நின்று இந்த தேசத்தைப் பாதுகாக்கிறது. நாங்கள் தனி திராவிட நாடு என்ற முழக்கத்தை வைத்திருந்தோம். சீன படையெடுப்பின் போது நாங்கள் அதை கைவிட்டு விட்டோம். வங்கதேச போரின் போது தேசம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு மற்ற மாநிலங்களை விட அதிகமானது. ஆறு கோடி ரூபாயை தேசப் பாதுகாப்பிற்காக அள்ளிக் கொடுத்தவர் கலைஞர். எங்களை குறைத்து மதிப்பிடாதீர்கள். நாங்கள் எப்பொழுதும் இந்த தேசத்தோடு தான் இருந்திருக்கிறோம்.

தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு துணை நிற்கிறோம்.

இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தில் அதிக நம்பிக்கை உடையவர்கள் நாங்கள். ஆகையால் எங்கள் மீதான உங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையை நிறுத்துங்கள்.

நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அனைத்து மொழிகளையும் மதியுங்கள். அனைத்து மதங்களையும் நேசியுங்கள். மேலும் மாகாணங்களுக்கான வரிப்பகிர்வு 42% என்பது மிக மிக குறைவானது. அதை மறுபரிசீலனை செய்யுங்கள்.

இவ்வாறு திருச்சி சிவா உரையாற்றினார்.